# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 09

சுட்டெண்:.............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மூன்றாம் வேற்றுமை உருபு

அ) ஐ ☐ ஆ) ஆல் ☐
இ) கு ☐ ஈ) அது ☐

2. விடிவெள்ளி தோன்றும் திக்கு

அ) வடக்கு ☐ ஆ) கிழக்கு ☐
இ) மேற்கு ☐ ஈ) தெற்கு ☐

3. தனிநாயகம் அடிகள் பிறந்த ஊர்

அ) கரம்பொன் ☐ ஆ) நவாலி ☐
இ) சுன்னாகம் ☐ ஈ) நல்லூர் ☐

4. பனைமரப் பொந்தில் ________________ கிளிக்குஞ்சு ஒன்று இருந்தது.

அ) திக்கித் திக்கி ☐ ஆ) சின்னஞ்சிறிய ☐
இ) அணிஅணியாக ☐ ஈ) கங்குகரை ☐

5. யாழ்மாவட்டத்தில் தொல்குடித்தமிழரது ஈமப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று

அ) பொம்பரிப்பு ☐ ஆ) கொக்காபே ☐
இ) கந்தரோடை ☐ ஈ) மாந்தை ☐

6. கொத்து என்பது

அ) தலை ☐ ஆ) குலை ☐
இ) தழை ☐ ஈ) குழை ☐

7. பனை + அடி என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) பனைஅடி ☐ ஆ) பனயடி ☐

இ) பனைவடி ☐ ஈ ) பனையடி ☐

8. நாகதீபம் அமைந்திருப்பது இலங்கையின்

அ) மேற்குப்பகுதியில் ☐ ஆ) வடபகுதியில் ☐

இ) தென்பகுதியில் ☐ ஈ ) கிழக்குப்பகுதியில் ☐

9. மலர்க்கை என்ற உவமை அணியில் வரும் உவமேயம்

அ) மலர் ☐ ஆ) போன்ற ☐

இ) மென்மை ☐ ஈ ) கை ☐

10. ‘‘மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே’’ என்னும் பாடல் கூறுவது

அ) உழவுத்தொழிலை ☐ ஆ) நெசவுத்தொழிலை ☐

இ) மட்பாண்டத்தொழிலை ☐ ஈ ) கடற்றொழிலை ☐

11. அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் கந்தரோடையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட ஆண்டு

அ) 1974 ☐ ஆ) 1975 ☐

இ) 1976 ☐ ஈ ) 1979 ☐

12. நித்திலம் என்பது

அ) வைரம் ☐ ஆ) முத்து ☐

இ) பவளம் ☐ ஈ ) மாணிக்கம் ☐

13. "பால் கொண்டு மடுப்பவும் உண்ணான்" என்னும் பாடலைப் பாடியவர்

அ) கபிலர் ☐ ஆ) பொன்முடியார் ☐
இ) ஔவையார் ☐ ஈ) கீர்த்தனார் ☐

14. மதமத என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐
இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

15. மட்குடம் என்பது

அ) இயல்புப்புணர்ச்சி ☐ ஆ) திரிதற்புணர்ச்சி ☐
இ) கெடுதற்புணர்ச்சி ☐ ஈ) தோன்றற்புணர்ச்சி ☐

16. இராவணனின் தம்பி

அ) அசேலன் ☐ ஆ) குத்திகன் ☐
இ) வீடணன் ☐ ஈ) குமணன் ☐

17. இலங்கை சிறீலங்கா என மாற்றப்பட்ட நூற்றாண்டு

அ) 19 ஆம் நூற்றாண்டு ☐ ஆ) 16ஆம் நூற்றாண்டு ☐
இ) 20ஆம் நூற்றாண்டு ☐ ஈ) 21ஆம் நூற்றாண்டு ☐

18. வெத்திலை என்ற பேச்சுவழக்குச் சொல்லின் செவ்வழக்கு

அ) வெற்றிழை ☐ ஆ) வெற்றிளை ☐
இ) வெற்திளை ☐ ஈ) வெற்றிலை ☐

19. கார் முகிலைக் கண்டு மயில்கள் களிப்பில் ஆடின. இதில் மயில்கள் என்ற சொல்

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) அடைமொழி ☐ ஈ) செயப்படுபொருள் ☐

20. பகுதியையும் இடைநிலையையும் இணைக்கும் சொல்லுறுப்பு

அ) விகுதி ☐ ஆ) சந்தி ☐

இ) சாரியை ☐ ஈ) இடைநிலை ☐

21. போர்க்களத்தில் முழங்கும் தோற்கருவி

அ) பறை ☐ ஆ) மேளம் ☐

இ) முரசு ☐ ஈ) உடுக்கை ☐

22. தன்மைப் பன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வந்தேன் ☐ ஆ) வந்தது ☐

இ) பறந்தன ☐ ஈ) விளையாடினோம் ☐

23. களிப்பு என்பது

அ) துன்பம் ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) வலிமை ☐ ஈ) சலிப்பு ☐

24. நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே எனக் கூறியவர்

அ) இறைவன் ☐ ஆ) தருமி ☐

இ) மன்னன் ☐ ஈ) நக்கீரன் ☐

25. உழவுத் தொழிலுடன் தொடர்பு அல்லாத சொல்

அ) ஏர் ☐ ஆ) மாடு ☐

இ) வலை ☐ ஈ) வயல் ☐

26. நடந்தனர் என்ற வினைச் சொல்லின் விகுதி

அ) நட ☐ ஆ) அர் ☐

இ) னர் ☐ ஈ) ஆர் ☐

27. புத்தர் காலத்திற்கு முன்னரே இலங்கையில் வாழ்ந்தவர்

அ) ஆங்கிலேயர் ☐ ஆ) சிங்களவர் ☐

இ) தமிழர் ☐ ஈ) ஐரோப்பியர் ☐

28. மகாவம்சம் ____________ மொழியில் எழுதப்பட்டது.

அ) தமிழ் ☐ ஆ) சிங்கள ☐

இ) ஆங்கில ☐ ஈ) பாளி ☐

29. வால் என்ற சொல்

அ) சினைப்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐

இ) தொழிற்பெயர் ☐ ஈ) காலப்பெயர் ☐

30. செய்தான் என்ற சொல்லின் இடைநிலை

அ) செய் ☐ ஆ) த் ☐

இ) ஆன் ☐ ஈ) ய் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

விடியல் என்பது எமக்குப் புத்துணர்ச்சியையும் இன்பத்தையும் தரும் பொழுதாகும். இவ் அதிகாலைப் பொழுதினிலே பறவைகளின் ஆரவார ஒலியுடன் கண்விழித்து எழுந்தான் ஓர் உழவன். அவன் தன் கடமைகளைச் சுறுசுறுப்பாக முடித்துவிட்டு வயலுக்குச் சென்றான். அங்கு அவன் வயலிலுள்ள பயிர்களுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். வெப்பமிகுதியால் உருவாகும் வியர்வைத்துளிகளைத் துடைத்தெறிந்துவிட்டு, பசியைப் போக்கக் குளிர்ந்த நீரை அள்ளி அள்ளிப் பருகிக்கொள்வான். எனினும், தன் செயலிலேயே கண்ணாயிருந்தான். அவ்வேளை தலையில் பழஞ்சோற்றுப் பானையுடன் வரம்பிலே விரைவாக வந்து கொண்டிருந்தாள் அவன் மனைவி. அவளைக் கண்டதும் பசிமிகுதியால் அவளை நோக்கி விரைந்தான். இருவரும் செழித்து வளர்ந்து நின்ற மரநிழலிலே அமர்ந்து கொண்டனர். மனைவி பழஞ்சோற்றை உருட்டி உருட்டிக் கணவனின் கைகளிலே கொடுக்க அதை உண்டு பசியைப் போக்கியபின் இருவரும் மகிழ்ந்தவாறு தத்தம் கடமைகளைச் செய்யப் புறப்படுகின்றனர். இவை உழவுத் தொழிலில் இடம்பெறும் அழகிய காட்சிகளாகும்.

1. உழவன் தன் கடமைகளை முடித்துவிட்டு எங்கே சென்றான்?

________________________________________

2. இங்கு குறிப்பிடப்பட்ட தொழில் யாது?

________________________________________

3. எமக்குப் புத்துணர்ச்சியையும் இன்பத்தையும் தரும் பொழுது எது?

________________________________________

4. உழவன் எவற்றிற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்?

________________________________________

5. மனைவி கணவனுக்கு எவ் உணவைக் கொடுத்தாள்?

________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர் என்ன?அவர் இறுதியாக எழுதிய நூல் எது?

___

___

2. ஆனைக் கோட்டையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட பல்கலைக்கழகம் எது ?எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?

___

___

3. இடைக்கற்காலத்தை எவ்வாறு அழைப்பர் ?

___

4. நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடும் பயிர் எதற்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளது ?

___

___

5. போர் முனையில் உயிர் விட்டு மானம் காத்த தந்தைக்கு நேர் வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க! இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

___

6. புத்தர் இலங்கைக்கு ஏன் வந்தார்?

___

7. தனிநாயகம் அடிகளார் திருக்குறளை எவ்வெவ் மொழிகளில் மொழி மாற்றுவித்தார்?

___

புள்ளிகள் 10

**4)** **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## மாவீரர்களே!

| | | |
|---|---|---|
| காண | வாழும் | விடுதலைக்காய் |

| | |
|---|---|
| வெற்றியும் | மண்ணின் |

தமிழ்த்தாயின் புதல்வர்களே!

தாயக ______________________ காவலர்களே!

விடுதலை ஒன்றையே நேசித்தீர்களே!

____________________ மண்ணில் வீழ்ந்தீர்களே!

நினைத்ததை வெல்வோம் என்றீர்களே!

நிறைவான _____________________ கண்டீர்களே!

களம் பல கண்ட மாவீரர்களே!

கல்லறையில் ____________________ செல்வங்களே!

உள்ளத்தால் உருகி நிற்கின்றோம்

உங்கள் முகம் _____________________த் துடிக்கின்றோம்!!

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. நிகழ்காலப் பெயரெச்சத்திற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

___________________________________

2. அறுவகைப் பெயர்ச்சொற்களும் எவை?

___________________________________

அவற்றில் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________ _______________

3. பின்வரும் மரபுத்தொடர்கள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

கிடுகிடு ___________________________

வீதிவீதியாக ___________________________

செக்கச்சிவந்த ___________________________

4. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பூஞ்சிரிப்பு | ____________ | பூவிதழ் | ____________ |
| அறிவுடைமை | ____________ | பொற்றாமரை | ____________ |
| வானவில் | ____________ | வாட்படை | ____________ |

5. பின்வரும் சொற்புணர்ச்சிக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

உயிர் முன் உயிர் ___________________________

உயிர் முன் மெய் ___________________________

மெய் முன் உயிர் ___________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

உலகத் தொடர்பு ஊடகங்களில் தொலைக்காட்சி முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. தொலைக்காட்சி பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே செல்கின்றது. தொலைக்காட்சியில் செய்தி, பொது அறிவுப்போட்டி, விளையாட்டு, நாடகம் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் செய்தி பார்ப்பது மிகவும் பயனுள்ளதாகும். செய்தி பார்ப்பதனால் நாம் உலக அறிவையும் மொழித்திறனையும் வளர்த்துக் கொள்ளலாம். ஆனாலும், அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் நமக்குப் பல இடர்கள் ஏற்படும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ இலங்கையின் முதற்குடிகள்

- ✸ இயற்கைக் காட்சிகளும் நீர் கண்டு மகிழ்ந்தவையும்

- ✸ பெற்றோரும் தாயக உறவுகளும்

புள்ளிகள் 20